**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**

**MCOP.No. 10/2024**

Deposition of witness for **RW1** for **Respondent** and solemnly affirmed and oath for sworn taken file by Tr.S.Prakash, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Parameshwaran | Father Name | : | Rathinavel |
| Village | : | | Age | : | |

**நாள்:12.03.2026.**

**எ.ம.சா.1. முதல் விசாரணை :**

நான் **வட்டார போக்குவரத்து அலுவலகம்** ஒசூரில் **இளநிலை உதவியாளராக** பணிப்புரிந்து வருகிறேன். வட்டார போக்குவரத்து அலுவலருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. அவருக்கு மினி பேருந்து தொடர்பான வழித்தடம் ஆய்வு பணி இருப்பதால் அவர் எனக்கு சாட்சியம் அளிக்க அனுமதி வழங்கி உள்ளார். அந்த அனுமதி கடிதம் **சா.சா.ஆ.Y1** ஆகும். அழைப்பாணையில் கேட்டுள்ள கெலமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.233/2023 க்கான KA 02 MD 2314 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் உண்மை நகல் **சா.சா.ஆ.Y2** ஆகும். TN 70 AP 5366 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் உண்மை நகல் **சா.சா.ஆ.Y3** ஆகும். முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படுள்ள KA 31 ES 1999 என்ற வாகனம் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கைக்கு எங்கள் அலுவகத்திற்கு வரவில்லை. TN 70 AP 5366 என்ற வாகனத்தை ஓட்டியதாக மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் சிவகுமார் த/பெ.முனிராஜ் என்பவர் ஓட்டியதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேற்படி சிவகுமாருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**குறுக்கு விசாரணை மனுதாரர் தரப்பில்**

TN 70 AP 5366 என்ற வாகனத்தின் உரிமையாளர் நாகராஜ், த/பெ.முத்தப்பா என்று மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பொதுவாக காவல்

துறையில் இருந்து வந்து எங்கள் அலுவலகத்திற்கு குற்ற எண், மற்றும் அந்த குற்ற எண் சம்மந்தப்பட்ட வாகனங்களை ஆய்வுஅறிக்கைக்கு உட்படுத்தவேண்டும் என்று சொல்லும் வாகனங்களைதான் நாங்கள் ஆய்வுஅறிக்கைக்கு உட்படுத்துவோம் என்றால் சரிதான். போலீசார் அப்பொழுது எங்களிடம் முதல் தகவல் அறிக்கை மற்றும் ஆய்வு விண்ணப்ப கடிதம் கொடுப்பார்கள் என்றால் சரிதான். முதல் த கவல் அறிக்கையில் சொல்லியுள்ள வாகனங்களையும், அந்த வாகனத்திற்குன்டான ஆவணங்களையும் கொடுக்கும் பட்சத்தில் நாங்கள் ஆய்வு செய்வோம் என்றால் சரிதான். KA 02 MD 2314 என்ற வாகனம் எதன் அடிப்படையில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது என்றால் அந்தவாகனத்தை ஆய்வு செய்த ஆய்வாளருக்கு தான் அந்த விவரம் தெரியும். நான் ஆவணத்தின் அடிப்படைடியில் மட்டும் சாட்சியம் அளிக்கிறேன்.

**மறுவிசாரணை இல்லை.**

ஓம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.